# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2481/02 - 2026 මාර්තු මස 23 වැනි සඳුදා - 2026.03.23

*2481/02 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டம்**

1985 ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் உப பிரிவு 4(1) மற்றும் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகிய அநுர குமார திசாநாயக்க ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி,திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2026, மார்ச் 23.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## ஒழுங்குவிதிகள்

1. இவ் ஒழுங்குவிதிகள் **"2026 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்"** என அழைக்கப்படும்.

2. பின்னர் திருத்தஞ் செய்யப்பட்ட 2023, சனவரி 01 ஆந் திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகள் இத்தால் மேலும் திருத்தஞ் செய்யப்படுகின்றன.

3. 2023, சனவரி 01 ஆந் திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளில் 3 ஆம் இலக்க ஒழுங்குவிதியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவ் ஒழுங்குவிதிகளில் IV ஆம் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள **இயைபு முறைக் குறியீடு 4012.13** இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மற்றும் சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விமான சேவைகள் அதிகாரிகளினால் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்குமாறு மற்றும் மீள் நிரப்பப்பட்ட விமான டயர்களை, சர்வதேச விமான சேவைகளை வழங்கும் இலங்கையின் விமான சேவைகள் நிறுவனங்களினால் அவ் விமான சேவைகள் நிறுவனம் மற்றும் சான்றளிக்கப்பட்ட சர்வதேச வழங்குநருக்கிடையிலான முறையாக செயற்படுத்தப்படும் விநியோக ஒப்பந்தமொன்றின் கீழ், துறைமுக மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் கீழ் இறக்குமதி செய்வதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

4. மேலே கட்டளை இலக்கம் 3 இன் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாட்டு எல்லைக்குள் மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் உள்நாட்டு சந்தைக்கு வழங்குதல் அல்லது இந்நாட்டினுள் அகற்றுதல் கூடாது.

5. இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு, உரிமம் பெற்ற வங்கிகளுக்கு அல்லது வேறு தொடர்புடைய நிறுவனங்களுக்கு “செயற்பாட்டு ஆலோசனைகள்” வழங்கப்பட வேண்டும்.

6. இவ் ஒழுங்குவிதிகள் 2028.03.31 ஆம் திகதி வரை மாத்திரம் அமுல்படுத்தப்பட வேண்டும்.

EOG 03 - 0218

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.